சுற்றுநிருபம் : **12/2008**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாணம்.
26.06.2008

வடமாகாணத்திலுள்ள
சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்

கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கான ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தும் அலுவலர்கள் குழாம் அமைத்தல்

1972ம் ஆண்டின் 12ம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 32 (2)இன் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்ட ஒழுங்கு விதியின் 92,93,94,95 பிரிவுகளின் படி ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களை நியமித்தல் தொடர்பான ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒழுக்காற்று விசாரணை நடாத்தும் அலுவலர் குழாம் ஒன்றினை வட மாகாணத்திலுள்ள மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மட்டத்தில் அமைக்கத் தீர்மானித்துள்ளது.

கடந்த காலங்களில் ஒழுக்காற்று அலுவலர்களது நடத்தை பற்றிய முறைப்பாடுகள் ஊழியர்களாலும், சங்கங்களினாலும், வேறு தரப்பினராலும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளன. இவ்வாறான நடத்தைகள் பற்றிய விளக்கத்தினையும், விபரங்களையும் தனித்தனியாகப் பரிசீலனை செய்து முடிவுகளைத் தெரிவிப்பது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்குரிய கடமையல்ல. ஆயினும் ஒழுக்காற்று விசாரணையினை நடாத்துவதற்கு ஒருவர் பொருத்தமானவரா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு. இச்சட்டப்படியான கடமையினைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும், கூட்டுறவு ஊழியர்களுக்கும், வேறு தரப்பினருக்கும் செய்வது தவிர்க்க முடியாத விடயமாகும்.

கூட்டுறவுச் சங்கமொன்றின் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களை நியமிப்பதற்குச் சேவையிலுள்ள அல்லது ஓய்வு பெற்ற அரச அலுவலர்கள், அரச கூட்டுத்தாபன அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் நிறைவேற்று மட்ட மூத்த சேவையிலுள்ள/ இளைப்பாறிய ஊழியர்கள் தகைமையுடையோர்கள் ஆவர். மேற்குறிப்பிட்ட தகுதி வாய்ந்தவர்களைக் கொண்ட ஒழுக்காற்று விசாரணை அலுவலர்கள் பெயர்க் கொத்து ஒன்றினைத் தயாரித்து அத்தகைய ஒவ்வொரு நபர் பற்றிய பின்னணி அறிக்கையுடன் சேர்த்து ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களே தகுதி வாய்ந்த அதிகாரிகள் என்பதை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நம்புகின்றது.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கிடையில் பெயர் குறித்து நியமிக்கப்படும் தகுதிவாய்ந்தவர்களில் ஒருவரை அம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களினால் நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணை ஒன்றிற்கான அலுவலராக நியமித்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒழுக்காற்று விசாரணை அலுவலராகத் தகுதிவாய்ந்தவர்களின் பெயர்க் கொத்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சிபாரிசுடன் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கு எதிர் காலத்தில் அனுப்பி வைக்கப்படும்.

ஆகவே மேற்குறிப்பிட்ட விடயங்களைப் பரிசீலனை செய்து மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களினால் தங்கள் மாவட்டத்திலிருந்து இவ்வருடத்திற்கான ஒழுக்காற்று விசாரணை அலுவலர்கள் பெயர்க் கொத்தொன்றினைத் தயாரித்து தங்களின் அறிக்கையுடன் விரைவில் அனுப்பிவைப்பதோடு வரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் பின்வரும் மாதிரிப் படிவத்தில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாவட்டம் :-

விசாரணை உத்தியோகத்தர் பெயர்	சேவையிலுள்ள அலுவலரா/ இளைப்பாறிய அலுவலரா என்பது	வகிக்கும் / வகித்த பதவி	வகிக்கும் பதவியில் / கடைசியாக வகித்த பதவியில் சேவைக்காலம்	விசாரணை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய அனுபவம் (சுருக்கமாக)

2008.06.20 ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

பிரதி : 01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்